# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

முன்னிலை:- திருமதி வி.கீதா, பி.ஏ.,எம்.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 12-ம் நாள் வியாழக்கிழமை

***இ.ம.எண். 337/2021 In அசல் வழக்கு எண்: 223/2014***

1. இளவரசன்
2. ராஜேந்திரன் (இறந்துவிட்டார்)
3. வளர்மதி
4. ராணி
5. பூந்தளிர்
6. அஜய்குமார் ...மனுதாரர்கள்/வாதிகள்

Proposed party 4th to 6th

/எதிர்/

1. நாகராஜன்
2. பூபதி
3. அன்பரசன்
4. பிரபாகரன்
5. மல்லிகா
6. ஜெகன்
7. நந்தினி
8. மைனர் சிவபாரத்
   Rep by அப்பா ராதா
9. பவானி
10. மணிமாறன்
11. பழனிவேல்
12. ஜெயகீதா
13. குமாரி
14. கார்த்தி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த இடைக்கால மனு என் முன்னர் 9.8.2021 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.ராமதாஸ் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.சரவணன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டறிந்தும், இதுநாள் வரை என்னுடைய பரிசீலனையின் கீழ் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## உத்தரவு

மனுதாரர் தரப்பில், இறந்து போன 2ம் மனுதாரர்-2ம் வாதிக்கு இந்த 4 முதல் 6ம் மனுதாரர்களை வாரிசுதாரர்களாக அங்கீகாரம் செய்து கொண்டு அவர்களை அசல் வழக்கில் 4 முதல் 6ம் வாதிகளாக சேர்த்து கொண்டு அசல் வழக்கை மேல்நடத்த உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 3ன் கீழ் தாக்கல் செய்த மனு.

**2. 6ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:-**

இம்மனுவின் 6ம் மனுதாரர் அசல் வழக்கில் உத்தேச 6ம் வாதி என்றும், மற்ற மனுதாரர்கள் சார்பிலும் இந்த அபிடவிட்டை தாக்கல் செய்வதாகவும், இந்த மனுவின் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், மேற்படி 1 முதல் 3 மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரர்கள் மீது பாகபிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு தாவா தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் எதிர்மனுதாரர்களில் சிலர் வழக்கறிஞர் வைத்து written statement தாக்கல் செய்து கட்சி செய்து வருவதாகவும், இந்நிலையில் 2ம் வாதியான தனது தந்தை கடந்த 12.02.2021ல் எவ்வித ஆவணமும் இயற்றாமல் இறந்து விட்டார் என்றும், அவருக்கு 4ம் மனுதாரரான அவருடைய மனைவி 5ம் மனுதாரரான அவருடைய மகள் 6ம் மனுதாரராகிய மகனாகிய தாங்கள் மூவர் மட்டுமே வாரிசுகள் என்றும், தங்களை தவிர இறந்துவிட்ட 2ம் வாதியான தனது தந்தைக்கு வேறு யாரும் வாரிசுகள் கிடையாது என்றும், ஆகவே இந்த நம்பர் வழக்கில் கடந்த 12.02.2021ல் இறந்துவிட்ட தனது தந்தையான 2ம் வாதிக்கு இந்த 4 முதல் 6 மனுதாரர்களை வாரிசாக அங்கீகரித்தும் அசல் வழக்கில் 4 முதல் 6 வாதிகளாக ஏற்றும் மேல் உத்தரவு செய்ய வேண்டியது அவசியமும் நியாயமுமாய் இருக்கிறது என்றும், கொரானா காலம் என்பதால் இந்த மனு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**3. 10, 11ம் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த மெமோவின் சுருக்கம்:**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு ஏற்புடையதல்ல, தள்ளுபடிக்குரியது என்றும், வழக்கில் கண்ட 2ம் வாதி கடந்த 12.02.2021 தேதியில் இறந்துவிட்டார் என்றும், அவர் இறந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் வாரிசு சேர்க்க மனு கொடுத்திருக்க வேண்டும் என்றும், ஆனால் மனுதாரர்கள் அசல் வழக்கில் இறந்துவிட்ட 2ம் வாதியை பொறுத்து Suit abate ஆன பிறகு 60 நாட்கள் கடந்து மனு கொடுத்துள்ளதாகவும், அதனால் இந்த மனுவை தாக்கல் செய்ய மனுதாரருக்கு எவ்வித தகுதியும் கிடையாது என்றும், அசல் வழக்கில் ஏற்பட்ட Abatement மற்றும் காலதாமதத்திற்கான மனுவை தாக்கல் செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்வது ஏற்புடையது கிடையாது என்றும், இந்த சட்டநிலைப்பாட்டின் கீழ் மனுதாரர் தாக்கல் செய்துள்ள O 22 R 3 மனு தள்ளுபடி செய்ய தகுதியானது என்றும், ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய இந்த எதிர்மனுதாரர் வேண்டுகிறார்.

4. இருதரப்பிலும் சாட்சி மற்றும் சான்றாவணம் தாக்கல் இல்லை.

**5. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த இடைமனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6. இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்து பார்க்கும்போது 1 முதல் 3 மனுதாரர்கள் இந்த எதிர்மனுதாரர்கள் மீது பாகபிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு தாவா தாக்கல் செய்து, வழக்கு நிலுவையில் இருக்கும்போது 2ம் வாதி கடந்த 12.02.2021ல் எவ்வித ஆவணமும் இயற்றாமல் இறந்து விட்டார் என்றும், அவருக்கு 4ம் மனுதாரரான அவருடைய மனைவி 5ம் மனுதாரரான அவருடைய மகள் 6ம் மனுதாரராகிய மகன் ஆகிய மூவர் மட்டுமே வாரிசுகள் என்றும், தங்களை தவிர இறந்துவிட்ட 2ம் வாதியான தனது தந்தைக்கு வேறு யாரும் வாரிசுகள் கிடையாது என்றும், ஆகவே இந்த நம்பர் வழக்கில் கடந்த 12.02.2021ல் இறந்துவிட்ட தனது தந்தையான 2ம் வாதிக்கு இந்த 4 முதல் 6 மனுதாரர்களை வாரிசாக அங்கீகரித்தும் அசல் வழக்கில் 4 முதல் 6 வாதிகளாக ஏற்றும் மேல் உத்தரவு செய்ய இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிருரையில் ”*2ம் வாதி கடந்த 12.02.2021 தேதியில் இறந்துவிட்டார், அவர் இறந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் வாரிசு சேர்க்க மனு கொடுத்திருக்க வேண்டும், ஆனால் மனுதாரர்கள் அசல் வழக்கில் இறந்துவிட்ட 2ம் வாதியை பொறுத்து Suit abate ஆன பிறகு 60 நாட்கள் கடந்து மனு கொடுத்துள்ளதாகவும், அசல் வழக்கில் ஏற்பட்ட Abatement மற்றும் காலதாமதத்திற்கான மனுவை தாக்கல் செய்யாமல் இம்மனுவை தாக்கல் செய்வது ஏற்புடையது கிடையாது*” என குறிப்பிட்டிருந்தாலும் இந்த 4 முதல் 6 மனுதாரர்கள் அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் என்பதாலும், இம்மனுவை நிராகரிப்பதற்கான குறிப்பிட்டு எந்த காரணமும் சொல்லப்படவில்லை. அசல் வழக்கில் அவசியமான தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் அதன் விளைவு எதிர்மனுதாரர்களுக்கே பாதகமாக அமையும் என்பதால் இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்த இடைமனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு பின்னர் இன்று 12.08.2021ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-.V.Geetha)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.